பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 22 | சனிக்கிழமை | 09.12.2023 | அதிர்வு 130

## கரையோரச் சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டம்

### நாளை பொன்னாலைச் சந்தியில்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்டத்தில் அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும் பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு 06▶

# எந்த நாட்டையும் பகைக்கவே மாட்டோம்!

## ரணிலால் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளுக்கு பாதிப்பு எதுவும் இல்லை என்கின்றார் அமைச்சர் சப்ரி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையால் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை சரியான பாதையில் கொண்டு செல்ல முடிந்துள்ளன என்றும், இன்று இலங்கை தனது ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக் கொண்டு அனைத்து நாடுகளுடனும் நட்புறவைக் கட்டியெழுப்புகின்றது என்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஒரு தரப்பிடம் சரணடையாமல் அனைத்து நாடுகளுக்கும் நட்புறவின் கரங்களை நீட்டியதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை இலங்கை பெற முடிந்தது என்று ம் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

"வெளிநாட்டலுவல்கள் 06▶



## வட்டுக்கோட்டை இளைஞர் படுகொலை வழக்கு:

# சந்தேகநபர்களான 4 பொலிஸாரையும் அடையாளம் காட்டினார் பிரதான சாட்சி

## 19ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை இளைஞர் படுகொலை வழக்கில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான நான்கு பொலிஸாரையும் வழக்கின் பிரதான சாட்சி நேற்று அடையாளம் காட்டினார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் (வயது 26) எனும் இளைஞர் கொடூர சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தார். 06▶



## மாங்குளத்தில் உருமறைத்து இருவரை கொலைசெய்ய வந்தவர் மடக்கிப் பிடிப்பு



(ந.லோகதயாளன்)

மாங்குளம் பகுதியில் இருவரைப் படுகொலை செய்ய முயன்றார் என்று சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள ஓட்டோ தரிப்பிடத்துக்குச் சென்றவர் அந்தப் 03▶




இந்திய இராஜதந்திர மட்டத்துடன் தொடர்புடைய ஒருவரை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்தேன். அவர் ஓர் உபதேசம் செய்தார்.

வழமையாக இந்திய வெளியுறவு அமைச்சரில் இருந்து இந்தியத் தூதரக அதிகாரிகள் வரை நமது தமிழ்த் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளைச் சந்திக்கும்போது செய்யும் உபதேசம்தான்.

"தமிழ்த் தலைவர்கள் பிளவுபட்டிருப்பது கூடாது. நீங்கள் ஒன்றுபட்டு 03▶



## பெருந்தோட்டத் தொழிலாளர்களின்

# சம்பள அதிகரிப்புக்கான கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி வலியுறுத்தல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கான கூட்டு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கோரும் குறைந்தபட்ச நாளாந்த சம்பளமான 1,700 ரூபாவை வழங்குதல் அல்லது அதிகரிக்கப்படும் சம்பளம் குறித்து டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறியத்தருமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்டக் கம்பனிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் பிரகாரம் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் தமது வேலைத்திட்டங்களை எவ்வாறு தயாரிப்பது என்பதை அறிந்து கொள்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குக் காணி உரிமை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளுக்காகக் குழுக்களை நியமிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகள் குறித்து ஆலோசிக்க ஒரு குழுவை நியமிக்கவும், தோட்டத் தொழிலாளர்கள், பெருந்தோட்டக் கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இன்னுமொரு குழுவை நியமிக்கவும் இதன்போது முன்மொழியப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நின்றால்தான் நீங்கள் கொழும்புடன் பேரம் பேசலாம். நாங்களும் (இந்தியாவும்) உங்களுக்காகக் கொழும்புக்கு ஏதேனும் அழுத்தம் கொடுத்து செய்விக்கலாம்" – என்ற சாரபட்ட பல்லவியை ஆரம்பித்தார்.

எனக்குப் புண்ணில் புளி தேய்த்த மாதிரி சீற்றம் பொங்கிக் கொண்டு வந்தது. நான் எரிந்து விழுந்தேன். "இந்த உடபதே சத்தை நிற்பாட்டுங்கள். ஈழத் தமிழருக்குத் தீர்வு என்று நீங்கள் ஒரு தலைப்பட்சமாக இலங்கையுடன் ஒப்பந்தம் செய்த போது எங்கள் ஒற்றுமை குறித்து நீங்கள் கவனிக்கவில்லை. அப்போது ஈழத்தமிழர்கள், இயக்கங்களாகப் பிரிந்து நின்று, இராணுவ ரீதியில் தங்களுக்குள் மோதிக் கொண்டும் இருந் தார்கள். மிதவாதக் கட்சியாகச் செயற்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை கூட இயக்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப் பல துண்டுகளாக இராணுவ ரீதியிலும், கருத்தியல் ரீதியிலும் நாங்கள் பிளவு பட்டு நிற்பதை பயன்படுத்தித் தான் நீங்கள் இடையில் புகுந்து விளையாடினீர்கள். எங்கள் சம்மதமின்றி அழுத்தம் போட்டு கொழும்புடன் ஒப்பந்தம் செய்தீர்கள். அந்த அழுத்தத்துக்கு விடுதலைப் புலிகள் கூட ஆரம்பத்தில் அடிபணிந்தார்கள். தமிழர்களாகிய எங்கள் மீது மட்டுமல்ல, சிங்கள அரசின் மீதும் கடும் அழுத்தம் போட்டுத்தான் ஒப்பந்தத்தைச் செய்தீர்கள். அந்த ஒப்பந்த வாசகத்தை நடைமுறையாக்கும் செய்வதற்காக தமிழர் தரப்பு மீது நீங்கள் யுத்தம் கூடத் தொடுத்தீர்கள். இவ்வளவையும் செய்த நீங்கள், இப்போது ஒப்பந்த வாசகங்களை நடை முறையாக்கம் செய்வதற்குத் தமிழ் தலைவர்கள் தங்க ளுக்குள் பிரிந்து நிற்பதுதான் காரணம், இடையூறு என் பது போல தத்துவம் பேசுவது 'டு மச்'. அது உங்களின் பொறுப்பு. அப்படி பார்த்தால் கூட, தமிழ் தலைமைகள், நீங்கள் இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாசகங்களை ஒட்டிய அம்சத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிக மிக ஒற்றுமையாகத்தான் இருக்கிறார்கள். உங்கள் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய 13 ஆவது திருத்தம் தீர்வுக்கான ஆரம்பப்படி, அது முழு மையாக நடைமுறையாக்கம் செய்யப்பட வேண்டும் என்ப தில் தமிழ் தரப்பில் இரண்டு கருத்துக்கு இடமே இல்லை. ஆகவே இனி மேலும் ஈழத் தமிழ் தலைவர்கள் ஒற்றுமைப் பட்டால்தான் உங்களால் உரியதைக் கொழும்பிடமிருந்து பெற்றுத் தர முடியும் என்று லாயக்கற்ற கதையை அவிழ்த்து விடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். உங்கள் இயலாமையை – கொழும்பு மீது உரிய அழுத்தம் தர முடியாத உங்களின் இராஜதந்திர செல்வாக்கு வறுமையின் உண்மை நிலையை மூடி மறைக்க ஈழத் தமிழ் தலைவர்களின் ஒற்றுமையின்மை என்ற திரைச்சீலையை நாடாதீர்கள்!" – என்று செமத்தியா கக் கொடுத்தேன்.

தலையாட்டி நான் சொல்வதை செவிமடுப்பதைத் தவிர, அவருக்கு வேறு வழி இருக்கவில்லை. எனக்கு பதில் கொடுத்து விளங்கப்படுத்துவதில் அர்த்தமில்லை என்று நினைத்தாரோ தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும் என் கருத்து நிலைப்பாடு உரிய வட்டாரங்களுக்கு, உரிய முறையில் எட்டும் என்ற திருப்தி யுடன் உரையாடலை நான் முடித்துக் கொண்டேன்.

நான் கூறியவை சரிதானே வாசகர்களே...?

## மாங்குளத்தில் உருமறைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் வசிக்கும் ஒருவரின் வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனக் கூறி ஓட்டோ ஒன்றை வாடகைக்குப் பிடித்துள்ளார். அவரின் நடத்தையில் சந்தேகமடைந்த சாரதி எதற்காகச் செல்கின்றீர்கள் எனக் கேட்டபோது அவருக்கு ஓர் அன்பளிப் புப் பொதி விநியோகம் செய்ய வேண்டும் எனக் கூறியுள் ளார்.

இவ்வாறு இடம்பெற்ற உரையாடலின்போது அவர் தன்னை உருமறைப்பதற்காக ஒட்டியிருந்த தாடி உரிந் துள்ளது. இதையடுத்து அவர் தப்பியோடும் நோக்குடன் வீ- தியால் வந்த இ.போ. சபை பஸ்ஸில் ஏற முயற்சித்தபோது மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவரிடம் இருந்து ஒன்றரை அடி நீள வாள், கயிறு மற்றும் சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர் இருவரைக் கொல்ல வந்தார் எனக் கூறியுள்ளார். அதையடுத்து அவர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# ‘லஞ்ச் சீற்’ பயன்பாட்டை உடன் தடை செய்யுமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குப் பரிந்துரை





சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை கருத்தில்கொண்டு “லஞ்ச் சீற்“ பயன்படுத்துவதைத் தடை செய்யுமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவால் இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் குறைத்தல், மீள்சுழற்சி செயன்முறையை மேம்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகச் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் கூடியது.

சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை சுங்கம், கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, நாட்டில் “லஞ்ச் சீற்” பயன்படுத்துவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் தொடர்பிலும், அவற்றில் காணப்படும் புற்றுநோய்க் காரணி மனித உயிரகளுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

சுற்றாடல் சட்டத்தைத் திருத்துவதற்காகத் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் குழுவில் கருத்தில் கொள்ளப்பட்டதுடன் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையைக் குறைப்பதற்கு விசேட யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

# மதுபானசாலைகளைத் திறக்கும் நேரத்தில் இன்று முதல் மாற்றம்



நாட்டில் இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில், மதுபானசாலைகளைத் திறக்கும் நேரத்தை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கலால் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்களுக்கு அமைய நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல், தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.


புதிய திருத்தத்துக்கு அமைய, வெளிநாட்டு மதுபான வகைகளை சில்லறை விலையில் விற்பதற்கான அனுமதியைப் பெற்றுள்ள மதுபானசாலைகள் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும்.

ஹோட்டல்களுக்கான அனுமதிப் பத்திரத்துக்கு அமைய, காலை 10 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையிலும், சில ஹோட்டல்களுக்கு அதிகாலை 2 மணி வரையிலும் வெவ்வேறு நேர அட்டவணையின் கீழ் திறந்திருப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையின் கீழ் நாடளாவிய ரீதியிலுள்ள ஏனைய வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்களைக் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை திறப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# சீனாவின் செயற்பாடுகளுக்கு உடனடியாக முடிவு கட்டுங்கள்!

## நாடாளுமன்றில் சித்தார்த்தன் எம்.பி. இடித்துரைப்பு



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

**இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் இலங்கையில் சீனாவின் செயற்பாடுகளை இலங்கை தடுக்கக் கூடிய வகையில் வெளியுறவுக் கொள்கைகளை கடைப்பிடிக்கத் தவறுவோமேயானால் மிகவும் ஒரு இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது:––

“வெளிவிவகார அமைச்சின் கொள்கை என்பது இலங்கை போன்ற மிகச் சிறிய நாட்டுக்கு மிக அவதானமாக இருக்க வேண்டிய விடயமாகும். இன்று பூகோள வல்லாதிக்க சக்தி ஒன்றே ஒன்றுதான் அது அமெரிக்கா. பிராந்திய வல்லாதிக்க சக்திகள் எல்லாம் இங்கு தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு முயன்றுகொண்டிருக்கின்ற இந்த வேளையிலே நாங்கள் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

1971ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தான் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது அன்று சிறீமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானிய யுத்த விமானங்கள் இங்கு வந்து எரிபொருள் பெற்றுக்கொண்டு மீண்டும் கிழக்கு பாகிஸ்தானுக்கு போகின்ற செயற்பாட்டுக்கு உதவிக் கொண்டிருந்தார். அப்போது இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கியமாக எனது தந்தை கூட இது தவறு இதைச் செய்யாதீர்கள், இதனால் இந்தியாவுடன் நீண்டகால பகை ஒன்று வந்துவிடும் என்று மீண்டும் மீண்டும் கூறியிருந்தார். ஆனால் அது நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது.

அதன் பிறகு 1980களிலே ஜனாதிபதியாக வந்த ஜே.ஆர்.ஜெயவர்தன இந்திரா காந்தியுடன் பகைமை ஒன்றை உருவாக்கி, இந்திரா காந்தியும் அவருடைய மகனும் மாடும் கன்றும் என்று கூறி அது பிரபல்யமாக கூறப்பட்டது. அதே போல சிறீமாவோ பண்டாரநாயக்கவுடன் இருந்த ஆத்திரத்தில், சிறீமாவோ பண்டாரநாயக்கவும் அநுரவும், இந்திரா காந்தியும், சஞ்செய்யும், இப்படியாக பிரச்சினையை உருவாக்கி 1983 இலே மிகப் பெரிய இனக்கலவரம் ஒன்று உருவானது.

அந்த இனக்கலவரத்தின் பின்பு ஒரு நிலைமை உருவாகியது. அன்று மிக அமைதியான முறையிலே, சாத்வீக முறையிலே போராட்டம் நடத்திக் கொண்டிருந்த தமிழர்கள் ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிலமையொன்று உருவானது. ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்கான ஒரு நிலைமை அவர்கள் மீது திணிக்கப்பட்டது. இந்தியாவும் அந்த நேரத்திலே ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் இருந்த அந்தப் பகைமையால் அல்லது ஜே.ஆர் ஜெயவர்தனவுக்கு இந்தியாவுடன் இருந்த பகைமையால் அது ஒரு மிகப்பெரிய யுத்தமாக வெடித்து மிக நீண்ட காலம் அந்த யுத்தம் சென்று கொண்டிருந்தது.

இதையெல்லாம் நான் ஏன் சொல்லுகின்றேன் என்றால், அயல்நாட்டுடன் எவ்வளவு தூரம் நாங்கள் கவனமாக இருக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே. இப்போது இந்தியாவுக்கு எதிராக சீனா இங்கு தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கின்றது. சீனாவுடனோ அல்லது இந்தியாவுடனோ என இந்த வல்லாதிக்க சக்திகளுடன் நாங்கள் எதிர்த்துக்கொண்டு இருக்கவேண்டும் என்று நான் கூற வரவில்லை. நான் கூறுவது, இவர்கள் அனைவரையும் பகைக்காத வகையிலே இலங்கை நடந்து கொள்ள வேண்டும் என்பது. அல்லாதுபோனால் அது நிச்சயமாக எங்கள் அனைவருக்குமே ஆபத்தாக முடியும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வடக்கு, கிழக்கிலே வாழுகின்ற நாங்கள் மிகவும் அவதானமாக வாழவேண்டி இருக்கின்றது. ஏனென்றால் சீனா இந்தியா வல்லாதிக்க சக்திகளுடைய பிரச்சினை எங்களை மிகவும் பாதித்துவிடும் என்று நாங்கள் மிகக் கவனமாக இருக்கின்றோம். ஆகவேதான் நாங்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம், இந்தியா அயல்நாடு, என்ன பிரச்சினை என்றாலும் உடனடியாக இந்தியா வருகின்றது, இதனால் நாங்கள் அவர்களை மேவாமல் சில விடயங்களைச் செய்ய வேண்டியது இந்த நாட்டைப் பொறுத்தமட்டிலே எங்களுடைய ஒரு கடமையாக இருக்கின்றது.

கப்பல்கள் வந்துபோவது, அதுவும் யுத்தக் கப்பல்கள் வந்து போவதை அவர்கள் கடுமையாக எதிர்க்கின்றார்கள். யுத்தக் கப்பல்கள் சீனக் கப்பல்கள் இங்கு வருகின்றபோது எதிர்க்கின்றார்கள். யுத்தக் கப்பல் மீன்பிடிக்க வருவதில்லை, அவர்கள் ஏதோவொரு காரணத்திற்காகவே வருகிறார்கள்.

உங்களுக்குத் தெரியும், 22ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் சபாநாயகர் தாய்வானுக்குச் சென்றிருந்தபோது சீனா அதை எவ்வளவுதூரம் எதிர்த்தது என்பது மாத்திரமல்ல தங்கள் கடற்படையை தாய்வானை நோக்கி நகர்த்தியது. அதேபோல யுத்த விமானங்கள் தாய்வானுக்கு மேலால் பறந்து பயமுறுத்துகின்ற ஒரு நிலைமையை செய்தார்கள். இந்தியா அதைச் செய்யவில்லை. ஆனால், அவர்கள் அதிலே கரிசனையாக இருக்கின்றார்கள், அக்கறையாக இருக்கின்றார்கள் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

இந்த நிலைமைகளைத் தவிர்த்து நாங்கள் ஒரு சிறிய நாடு. அது வங்குரோத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக இப்போது முன்னேறிக்கொண்டு வருகின்ற நாடு. ஆகவே, நாங்கள் சரியான முறையிலே வெளியுறவுக் கொள்கைகளை கடைப்பிடிக்கத் தவறுவோமேயானால் மிகவும் ஒரு இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படுவோம்.

அமைச்சர் இந்த விடயங்களை கையாளக்கூடியவர் என்பது எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் அவருக்கு உதவியாக அரசும் சில விடயங்களைச் செய்ய வேண்டும். இவைகளைத் தவிர்த்து நடப்பதற்கு தொடங்கினால் மிகப்பெரிய பிரச்சினை வரும்.” – என்றார்.

# அச்சிட்டு விநியோகிக்கப்படும் மின்பட்டியல் வடக்கில் நிறுத்தம்

## ஈ - பில்லைப் பதிவு செய்யுமாறு இ.மி.ச அறிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 09

வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் அச்சிட்டு விநியோகிக்கப்படும் மின் பட்டியல் நிறுத்தப்படுகின்றது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.


இதன்படி அந்நாளில் இருந்து இலத்திரனியல் மின்பட்டியல் அனுப்பி வைக்கப்படும் என்றும் இலங்கை மின்சார சபை மேலும் அறிவித்துள்ளது.

குறித்த இலத்திரனியல் மின்பட்டியலை ஈ – பில் (e-bill) மற்றும் குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்காக REG (இடைவெளி) கணக்கு இலக்கம் என டை (type) செய்து 1987 என்ற இலக்கத்துக்குக் குறுந்தகவலை (SMS) அனுப்பிப் பதிவு செய்யலாம்.

மேலும் EBILL (இடைவெளி) கணக்கு இலக்கம் (இடைவெளி) உங்களுடைய மின்னஞ்சல் என டைப் (type) செய்து 1987 என்ற இலக்கத்துக்குக் குறுந்தகவல் (SMS) அனுப்பிப் பதிவு செய்யலாம்.

இதுமட்டுமல்லாமல் EBILL.ceb.lk என்ற இணையப் பக்கத்தின் ஊடாகவும் பதிவு செய்யலாம் என்றும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.




### எந்த நாட்டையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சு என்ற வகையில், கடந்த ஆண்டு முதல் நாம் முக்கியப் பங்காற்ற வேண்டியிருந்தது. கடந்த காலங்களில் எற்பட்ட பல்வேறு விடயங்களால் வெளிநாடு களுடனான நமது உறவுகள் பாதிக் கப்பட்டன. ஆனால், ஜனாதிபதியின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையால் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை சரியான பாதையில் கொண்டு செல்ல முடிந்துள்ளது. அதேபோன்று, எமது நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக் கொண்டு அனைத்து நாடுகளுடனும் நட்புறவை ஏற்படுத்தி வருகின்றோம்.

ஒரு தரப்பைச் சார்ந்திருக்காமல் அனைத்து தரப்பினருடனும் இணக்கமாகச் செயற்படுவதே எமது நோக்கம். அனைத்து நாடுகளுடனும் நட்புறவைக் கட்டியெ முப்புவதே ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் நோக்கமாகும். யாரையும் பகைத்துக்கொள்ளாமல் எந்தத் தரப்புக் கும் சாதகமாக இல்லாமல் அவதானத் துடன் இருக்க வேண்டும்.

இந்த நட்புறவின் மூலம் பல வரலாற் றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளை மேற் கொள்ள முடிந்தது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் கடன் மறுசீரமைப் புக்கு பாரிஸ் சமூகத்தில் சில வழிமுறை கள் உள்ளன.

குறைந்த வருமானம் கொண்ட நாடு களுக்கு மேல் உள்ள நாடு என்ற வகை யில், கடனை மறுசீரமைப்பதற்கான பொறி முறை நம்மிடம் இல்லை. எனவே, நாங் கள் எமக்கே உரிய பொறிமுறையை தயார் செய்ய வேண்டியிருந்தது. இதன்போது, பாரிஸ் கிளப்புக்கு வெளியே இந்தியா, சீனா மற்றும் ஜப்பானின் ஆதரவின் மூலம் பாரிஸ் கிளப்பிலிருந்து சில உத விகளைப் பெற முடிந்தது.

கடந்த மாத நிலவரப்படி, நமது நாட்டின் கடனை மறுசீரமைக்க அனைத்து நாடுக ளும் ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளன. இதன் காரணமாக, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாட்டில் கடன் மறு சீரமைப்பை விரைவுபடுத்தும் திறன் எம் மிடம் உள்ளது. அத்துடன், டிசம்பர் மாதம் 12ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத் துடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் சர்வ தேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இரண்டாவது தவணையைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக இலங்கை, சரியான பாதையில் செல்வதையே காட்டுகிறது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண் டுள்ளது. ஜனாதிபதியின் சரியான தீர்மா னங்கள் காரணமாக இந்தியா, சீனா, மேற் கத்திய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் உட்பட அனைத்து நாடுகளிலும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்கு நர்களின் ஒப்புதலைப் பெற முடிந்–துள்ளது.

கடன் மறுசீரமைப்புக்குப் பிறகு, நம் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிடும் என்பதை உலகுக்கு அறி விக்க முடியும். எமது மக்கள் மிகவும் சிர மப்பட்டனர். ஆனால், இன்று நாட்டை அந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க அரசு படிப்படியாக செயல்பட்டு வருகிறது.

கடன் மறுசீரமைப்பு மூலம் நாம் செலுத்த வேண்டிய கடனின் அளவைக் குறைக்க முடிகிறது. மேலும், கடனைச் செலுத்தும் அளவைக் குறைத்து, வட்டி யைக் குறைப்பதன் மூலம், நாம் செலுத்த வேண்டிய கடனில் இருந்து பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிவாரணத்தை எமது நாடு பெறும் திறன் உள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு புதிய முதலீட்டாளர்கள் தேவை. அதற்கான வேலைத்திட்டத்தை நாம் இப்போது தொடங்கியுள்ளோம். அடுத்த வருடத் தின் முதல் காலாண்டில், தற்போதுள்ள பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மேலும் மேம்படுத்த முடியும் என்று நாங் கள் நம்புகின்றோம்." – என்றார்.

### சந்தேக நபர்களான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது தொடர்பான வழக்கு விசாரணை கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன் றில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வரு கின்றன .

அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸாரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதன்போது நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் வழக்கின் பிரதான சாட்சியான கொலையான இளைஞருடன் கைதான மற்றைய இளைஞர் மன்றில் தோன்றி சந்தேகநபர்களை அடையாளம் காட்டினார்.

அதைத் தொடர்ந்து நான்கு சந்தேக நபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு நீதிவான் நீடித்து உத்தர விட்டதுடன், வழக்கையும் அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார்.

### கரையோரச் சுவீகரிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வன ஜீவராசிகள் திணைக்களம் முயற்சி எடுத்துள்ள நிலையில் அதைக் கைவிடு மாறு வலியுறுத்தி பொன்னாலை சந்தி யில் கடற்றொழிலாளர்களும் பொதுமக் களும் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்துக்குப் பொன்னாலை தொடக் கம் அராலி வரையுள்ள கடற்றொழிலா ளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதி கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உலகத் தமிழர் பேரவலம்

'எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்' என்பார்கள். அப்படி தமிழ்த் தலைவர்கள் பலரும் ஏறிச் சறுக்கி விழுந்த நொண்டிக் குதிரைக்கு 'தேசிய கலந்துரையாடல்' அல்லது 'இமயமலைப் பிரகடனம்' என்ற பெயர் சூட்டி, ஏறிச் சறுக்கி விழுவதற்கு உலகத் தமிழர் பேரவை முற்பட்டிருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் புலம்பெயர் சமூகத்தினரும் பங்காளிகள்தாம். நல்லிணக்கத்தின் ஒரு பகுதி, தத்தமது இடங்களுக்கு மக்கள் மீளத் திரும்புவதற்கான உரித்தாகும். அந்த வகையில் தேசிய இனப் பிரச்சினையில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் கணிசமான பங்கு உண்டு. ஆனால் அவ்விடயத்தில் தமிழர் தரப்பில் அவர்கள் மட்டுமே பங்காளிகள் அல்லர். புலம்பெயர்ந்தவர்கள் போல களத்தில் நின்ற மக்களும் தலைவர்களும் முக்கிய இடத்தில் இருக்கின்றார்கள்.

அவர்கள் யாருக்கும் தெரியாமல், புலம்பெயர்ந்த தமிழர்கள் - அதுவும் அந்தப் பெயரில் பல கட்டமைப்புகள் இருக்க அதில் ஒரு கட்ட மைப்பினர் - திடீரென வந்திறங்கி, தேசியக் கலந்துரையாடல் என்பதும், முன்பின் அறிந்திராத 'இமயமலைப் பிரகடனம்' என்று பறைசாற்றுவதும் விநோதமான விடயங்கள்.

ஏற்கனவே இங்கு களத்தில் தமிழரின் தலைமைகளிடையே பல பிரிவுகள், குழுக்கள், பிளவுகள், முட்டுப்பாடுகள், முரண்பாடுகள், மோதல்கள் தாராளம். உலகத் தமிழர் பேரவையின் இந்த இரகசியக் காய் நகர்த்தல்களோடு அமைந்த இந்த நடவடிக்கை இன்னும் பல பிளவுகளை - மோதல்களை - தமிழர் தரப்புக்குள் ஏற்படுத்தப் போவது திண்ணம்.

அவர்களது நகர்வு சரியாக இருக்கலாம். கொள்கை ரீதியில் தனித்துவமானதாக இருக்கலாம். ஆனால் அதைச் சத்தம் சந்தடியின்றி, பிறருக்குத் தெரியாமல், காதும் காதும் வைத்தால் போல தமிழரின் பெயரால் நகர்த்துவது பலத்த சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தும் என்பது உண்மை. இதில் வெளிப்படைத் தன்மை முக்கியம்.

அதுவும் பௌத்த - சிங்களப் பேரினவாதம் பேயுருக் கொண்டு, தமிழர் தாயகத்தைச் சூறையாடி, பௌத்த மயமாக்கலை காவியுடையினர் மூலமே நேரடியாகத் தீவிரமாக முன்னெடுக்கும் இச்சமயத்தில், அக்காவியுடைத் தரப்புடன் இணங்கிப் போகும் விடயத்தை காதும் காதும் வைத்தால் போல ஆரம்பிப்பது தமிழ் மக்களின் நம்பிக்கையை வெல்லும் விடயமாக அமையவே மாட்டாது.

இதுகொள்கைரீதியாகக்கையாளப்படவேண்டிய விவகாரம். கொள்கை ரீதியாகக் கையாளும் உரித்துடைய தரப்புகளின் பங்களிப்புடன்தான் அது முன்னெடுக்கப்பட வேண்டும்.

முதலில் 'இமயமலைப் பிரகடனம்' என்பது யாது என்ற விடயம் தமிழ் மக்கள் முன் வைக்கப்பட்டிருக்க வேண்டும். கடந்த ஏப்ரலில் அந்தப் பிரகடனம் செய்யப்பட்டதாக இப்போது கூறுகின்றார்கள். இமயமலை முகடுகளில் அப்போது ஒலித்ததுடன் அது அப்போதே அமுங்கி விட்டது போலும்.

அதை வைத்துக்கொண்டு 'தேசிய கலந்துரையாடல்' ஆரம்பிப்பது குறித்து தமிழ் மக்களுடனும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடனும் பேசப்பட்டிருக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து திடுதிப்பென வந்து, கொழும்பில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுடன் பேசி முடிவெடுத்துக் கொண்டு, கேட்டுக் கேள்வி இல்லாமல் தமிழ் மக்கள் மீது இத்தகைய செயல் திட்டத்தைத் திணிக்கும் அதிகாரத்தை உலகத் தமிழர் பேரவை தன்பாட்டில் எடுத்திருப்பது விசனத்துக்குரியது.

அதைக் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உலகத்தமிழர் பேரவை ஆரம்பித்திருப்பது அறிவார்ந்த செயல் அல்ல.

ரணில் இன்னும் பத்து மாதங்கள்தான் ஜனாதிபதி. அதற்குப் பின்னர் அவர் இந்தப் பதவியில் இருப்பாரோ தெரியாது. பதவியில் நீடிப்பதற்காகத் தாம் எதுவும் செய்வார் என்பதை நிரூபித்து வருபவர் அவர். அப்படிப்பட்டவர் 'இமயமலைப் பிரகடனத்தை' தேவைப்பட்டால் இந்து சமுத்திரத்தின் ஆழத்தில் புதைக்கவும் தயங்க மாட்டார். அத்தகையவரோடு தேசியக் கலந்துரையாடலைத் தமிழர்கள் ஆரம்பிப்பதா என்பது தமிழ் மக்களோடு பேசி முடிவெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதன் பின்னர்தான் ரணிலோடு ஊடாட்டத்தை ஆரம்பித்திருக்க வேண்டும்.

கடந்த 75 ஆண்டு கால இலங்கை அரசியலில் எல்லா அரசுத் தலைவர்களுமே தமிழர்களோடு நடத்திய சமரச முயற்சிகளில் குத்துக்கரணம் அடித்தவர்கள்தான். ஆனால் அந்த வரிசையில் உச்ச மட்டத்தில் 'அந்தர் பல்டி' அடித்தவர் ரணில் விக்கிரமசிங்கவே.

சர்வதேச அரங்கில் நடைபெற்ற பேச்சுக்களின் போது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர்களுக்கு இணைந்த வடக்குக் கிழக்கில் சமஷ்டித் தீர்வை வழங்க இணங்கியவர், இப்போது அரசமைப்பில் அங்கமாக இருக்கும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூட நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் வேண்டும் என்று தமிழர்களுக்கு அரசியல் பாடம் எடுக்கின்றார். (உலகத் தமிழர் பேரவைக்கும் நல்ல பாடம் படிப்பிப்பார் என எதிர்பார்க்கலாம்.) அரசமைப்பில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களைப் பிரிக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கவே இயலாது என்பவர். அரசமைப்பில் இருக்கும் 13 ஐக் குறைத்து '13 மைனஸ்' பற்றிப் பேசுபவர். பத்து மாதங்களின் பின்னர் பதவியில் இருப்பாரோ என்று தெரியாத ஒருவருடன் காதும் காதும் வைத்தால் போல இந்த விடயத்தை ஒட்டிக் காய் நகர்த்துவது - தேசியக் கலந்துரையாடலை ஆரம்பிப்பது - அதுவும் தமிழர் தரப்பின் தலைவர்களுக்குத் தெரியாமல் காய் நகர்த்துவது - தமிழ் மக்கள் மத்தியில் இலகுவில் அங்கீகாரத்தைப் பெறுவது துர்லபமே.

தேசிய பேச்சுவார்த்தையை தொடங்குமாறு கால் நூற்றாண்டுகளுக்கு மேல் இந்த மண்ணில் இருந்தபடி டக்ளஸ் தேவானந்தா போன்றோர் வலியுறுத்தும் போது அதை கிண்டல் அடித்தவர்கள், இப்போது தம்பாட்டில் தமிழ் மக்களுடன் கலந்துரையாடாமல், அதை ஒரு தலைப்பட்சமாக ஆரம்பித்திருப்பதாகக் கூறுவது நிச்சயம் பல குழப்பங்களை ஏற்படுத்தும்.

## சென்னையைத் தாக்கிய சூறாவளியால்

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ஆயிரம் குடும்பங்களும் பெரும் அவலத்தில்!





(ந.லோகதயாளன்)

தமிழகம், சென்னையில் கொட்டித் தீர்த்த மழை காரணமாக குமுடிப்பூண்டியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு அகதிகள் முகாமில் உள்ள ஆயிரம் குடும்பங்களும் பெரும் அவலத்தைச் சந்தித்துள்ளனர்.

சென்னையைத் தாக்கிய சூறாவளி காரணமாகவே குமுடிப்பூண்டி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு அகதிகள் முகாமும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. இந்த தமிழர் மறுவாழ்வு முகாமில் 920 பதிவு செய்யப்பட்ட குடும்பங்களும், 107 பதிவு அற்ற குடும்பங்களும் தங்கியுள்ளனர்.

இங்கே ஏற்பட்ட சூறாவளியின் காரணமாக அனைவரும் பாதிப்புக்களைச் சந்தித்ததோடு 21 வீடுகளின் சுவர்கள் இடிந்தும் வீழ்ந்துள்ளன. அதிக காற்றின் காரணமாக 40 இற்கும் மேற்பட்ட வீடுகளின் கூரைகள் பாதிக்கப்பட்டதோடு மேலும் பல மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் வீடுகள் உள்ளிட்ட பொருள்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்பட்ட சூறாவளியால் அங்கே தங்கியிருந்த அனைத்து மக்களும் பாதிப்படைந்தமையால் தற்போது அரசு சமைத்த உணவும் போர்வைகளும் வழங்கி வருகின்றது.

இருந்தபோதும் இன்றுவரை இயல்பு நிலை திரும்பவில்லை என முகாமில் உள்ள மக்கள் தெரிவிப்பதோடு இனி வரப்போகும் தொற்று நோய்கள் குறித்தே அச்சமாகவுள்ளது என்கின்றனர்.













# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு எஸ். ஜெய்ஷங்கருக்கு தமிழக முதல்வர் கடிதம்!



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 21 மீனவர்கள் மற்றும் 133 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் .ஜெய்ஷங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.


இந்த விவகாரம் தொடர்பில் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மீன்பிடித் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவது அவர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித் துள்ளதாக தமிழக முதல்வர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இலங்கைக்கடற்படையினரால் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டு அவர்களது வசமுள்ள 133 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கரை முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

# 10 ஆண்டுகளில் வளர்ச்சியின் மூலமாக ஊழலும், வாரிசு அரசியலும் ஒழிப்பு!

## - மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவிப்பு



கடந்த 10 ஆண்டுகளில் வளர்ச்சியின் மூலமாக ஊழலும், வாரிசு அரசியல் முறையும் ஒழிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்பு, 4 மாநில தேர்தல் முடிவுகள் வெளியானது. இதில் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களில் பா.ஜ.க. வென்று ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில், தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது.

இந்தத் தேர்தல் முடிவுகள் தேசியளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தல் நடக்கும் நிலையில், பா.ஜ.கவினர் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று புதுடில்லியில் உள்ள புராரியில் அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தின் தேசிய மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

அதன் பின்னர் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"கல்வி என்பது தொழில் வாழ்க்கையை வடிவமைப்பதற்கு மட்டுமல்ல, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் கூடதான். கடந்த 10 ஆண்டுகளில் வளர்ச்சியின் மூலமாக ஊழல், வாரிசு அரசியல் முறை, சாதி வெறி ஆகியவை மாற்றப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் இளைஞர்களுக்கு பொன்னான எதிர்காலம் காத்திருக்கிறது. இந்தியாவுக்கான நேரம் வந்துவிட்டது. உலகமே பல்வேறு பிரச்சினைகளுடன் தீர்வுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. இளைஞர்களின் சக்திதான் நாட்டின் முதுகெலும்பாகவும், அதன் வளர்ச்சிக்கும் உந்துதலாக உள்ளது" என்று தெரிவித்தார்.

# மாரடைப்பால் மலையாள நடிகை லக்ஷ்மிகா சஜீவன் மரணம்!

'சவுதி வெள்ளக்கா', 'உயரே' உள்ளிட்ட படங்களில் நடித்த மலையாள நடிகை லக்ஷ்மிகா சஜீவன் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். அவருக்கு வயது 24.

மலையாளத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு வெளியான 'காக்கா' படத்தில் தன்னுடைய நடிப்பின் மூலம் கவனம் பெற்றவர் நடிகை லக்ஷ்மிகா சஜீவன். பஞ்சமி என்ற கதாபாத்திரத்தில் நடித்திருந்த அவரது நடிப்பு ரசிகர்களால் பாராட்டப்பட்டது.

இது தவிர அவர், 'புழையம்மா', 'சவுதி வெள்ளக்கா', 'உயரே', 'ஒரு யமந்தன் பிரேமகதா' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். கடைசியாக 'கூன்' படத்தில் நடித்திருந்தார்.

இந்த நிலையில், டுபாயின் ஷார்ஜாவில் உள்ள வங்கி ஒன்றில் வேலைப் பார்த்துகொண்டிருந்த லக்ஷ்மிகா சஜீவன் மாரடைப்பால் உயிரிழந்துவிட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

அவரது இந்த திடீர் மரணம் மலையாள திரையுலகினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பலரும் அவருக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர். கடைசியாக நவம்பர் 2 ஆம் திகதி



தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "இருளையும் தாண்டிய ஒளி நம்பிக்கை கொடுக்கும்" என பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் அமைச்சரின் மகன் ஹமாஸுடனான மோதலில் பலி!





இஸ்ரேலின் முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போது அந்த நாட்டின் போர் அமைச்சரவையில் அமைச்சராக உள்ளவருமான காடி ஐசென்கோட்டின் மகன், காஸாவில் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

வியாழன் அன்று வடக்கு காஸாவில் நடந்த மோதலில் 25 வயதான மேஜர் கால் ஐசென்கோட் இறந்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

சுரங்கப்பாதை வெடித்ததில் மேஜ் ஐசென்கோட் படுகாயமடைந்து மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் என இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தனதும் மனைவியினதும் “இதயம் உடைந்து விட்டது” என்றும், கேல் ஐசென்கோட் ஒரு “உண்மையான ஹீரோ” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனது அறிக்கையில் நெதன்யாகு மேலும் குறிப்பிடுகையில், “எங்கள் மாவீரர்கள் வீண் போகவில்லை. வெற்றி பெறும் வரை தொடர்ந்து போராடுவோம்.” என தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல இஸ்ரேலிய அரசாங்க அதிகாரிகள் மற்றும் சட்ட மியற்றுபவர்களும் ஐசென்கோட் குடும்பத்திற்கு தங்கள் இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

# சீனாவில் பரவி வரும் நிமோனியா தொற்று: பிரித்தானியா சுகாதாரத்துறை எச்சரிக்கை!

பிரித்தானியாவில்நடைபெறவிருக்கும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில் ஈடுபடும் போது, மக்கள் முகக்கவசம் அணிய முன் வர வேண்டும் என சுகாதாரத்துறை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சீனாவில் பரவி வரும் மர்ம நோயான நிமோனியா தொற்றானது ஐரோப்பாவையும் தாக்கியுள்ளது. சீனாவில் கடந்த சில வாரங்களாக பரவி வரும் மர்ம நோயால் உலக நாடுகள் பல அச்சத்தில் உள்ளது.

சீன மருத்துவமனைகள் இந்த நோயால் நிரம்பிக்காணப்படுவதோடு, சிறுவர்களே இதில் அதிகமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நோய் குறித்து, உலக நாடுகள் தீவிரமாக கண்காணித்து வரும் நிலையில், ஐரோப்பாவில் இந்த பெருந்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், டென்மார்க் மற்றும் நெதர்லாந்து நாடுகளில் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் பாதுகாப்பான



சூழலை உருவாக்க முடியும் என அமெரிக்க நோயியல் நிபுணரான டொனால்ட் கார்சேர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றின் போது பயன்படுத்தப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் இந்த தொற்றிலிருந்து பாதுகாக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தான் கிறிஸ்மஸ் கொண்டாடங்கள் ஆரம்பமாக உள்ள நிலையில், பிரித்தானியர்கள் கொண்டாடத்தின் போது, முகக்கவசம் அணிய முன் வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பிரித்தானியா நிர்வாகம் நோய்த்தொற்று தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறினால், இந்த ஆண்டும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் சீர்குலையும் என நிபுணர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கைக்குச் சலுகைக் கடன்

## ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி

இலங்கைக்கு 20 கோடி அமெரிக்க டொலர் சலுகைக் கடனை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், நாட்டின் நிதித் துறையை ஸ்திரப்படுத்துவதற்காக இந்தச் சலுகைக் கடன் வழங்கப் படவுள்ளது.

இதனூடாக நாட்டின் வங்கிக் கட்ட மைப்பு, நிதி கட்டமைப்பு, சிறு மற்றும் மத்திய தொழிற்துறைகள் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ADB Asian Development Bank

# கொடிகாமம் வன்முறை தொடர்பில் மூவர் கைது




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி – கொடி காமம் பகுதியில் இளைஞரை வீதி யில் வைத்துத் தாக்கி அவரது வீடு புகுந்து உடமைகளைச் சேதப்படுத்தி நகை, பணங்களைக் கொள்ளை யிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம், தவசிக்குளம் பகுதி யைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரையும் விசா ரணைகளுக்கு பின்னர் இன்று சனிக் கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி பகுதியில் கடந்த புதன்கிழமை வீதியால் சென்ற இளைஞர் மீது வன்முறைக்குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன், குறித்த இளைஞரின் வீட்டுக்குச் சென்று பெறு மதியான உடமைகளை அடித்து நொறுக்கியதுடன் வீட்டில் இருந்த நகை, பணம் போன்ற பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

காயப்பட்ட இளைஞர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். சிறையில் பெண் கைதியை துன்புறுத்தும் சிறைக்காவலர்கள்

## மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்கள் முறைப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பெண் கைதி ஒருவர் துன்புறுத்த லுக்கு உள்ளாகி வருகின்றார் என்று பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவி- னர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய் துள்ளனர்.

"சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள எமது உறவான பெண் கைதியைக் கடந்த வியாழக்கிழமை பார்வையிடச் சென்ற போது, சிறைக் காவலர்கள் தன்னைத் துன்புறுத்து கின்றனர் என்று எம்மிடம் அவர் கூறி அழுதார்" – என்று உறவினர்கள் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.




# வடக்கில் சர்வதேச மண் தின நிகழ்வு

**(எஸ்.நிதர்ஷன்)**

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவு முன்னெடுத்த சர்வதேச மண் தினம் - 2023 நிகழ்வு சர்வதேச மண் தினமான கடந்த 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலியிலுள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெற்ற மண் தின நிகழ்வின்போது விவசாய அமைச்சால் அறுவடை சஞ்சிகை வெளியிடப்பட்டதோடு சர்வதேச மண் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

சிறப்பு நிகழ்வாக விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து வழங்கிய 'மண் தேவி' விழிப்புணர்வு நாடகம் மேடையேற்றப்பட்டது.

மண் தின நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தன், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் சீ.வசந்தரூபா, உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் கலாநிதி இ.அன்ரனிராஜன் உள்ளிட்டோரும், விவசாய அமைச்சு மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த மண் தின நிகழ்வுகளை வடக்கு மாகாண விவசாய அமைச்சுடன் இணைந்து வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் பிரதேச சபைகள் இணைந்து ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.














# யாழில் சர்வதேச சதுரங்கப் போட்டி ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்தினாலான சதுரங்கப் போட்டி நேற்றுக் காலை ஆரம்பமானது. இந்தப் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள செல்வா பலாஸில் நடைபெறும் போட்டியின் ஆரம்ப நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்தியத் துணைத் தூதராக அதிகாரி ஸ்ரீ ராம் மகேஷ், இலங்கை சதுரங்கக் கழகத்தின் தலைவர் லக்ஸ்மன் விஜேசூரிய, ஞானம் பவுண்டேசனின் உப தலைவர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்,

“யாழ்ப்பாணம் சர்வதேச சதுரங்கப் போட்டி 2023“ என்ற தலைப்பில், யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் 800 இற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்துகொண்டுள்ளனர்.

சர்வதேச தரத்தில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் 150 இற்கு மேற்பட்டவர்களுக்கு பரிசு கிடைக்கும் விதமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இதில் சகல வயதுப் பிரிவுகளிலும் இரு பாலரும் கலந்து பரிசில்கள் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி சர்வதேசப் போட்டியாக அமைந்துள்ளதால், எமது பிரதேசத்தில் உள்ள சதுரங்க வீரர்கள் தங்களின் சர்வதேச தரத்தைக் கூட்டுவதற்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.











# இன்றைய ராசி பலன்கள் - 09.12.2023

## மேஷம்

எதிர் காலம் பற்றிய எண்ணங்களும் கனவுகளும் உங்கள் மனதில் நிறைந்து காணப்படும். இது அனைவரிடத்திலும் காணப்படும் பொதுவான விருப்பம். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு சிறந்த நாள்.

பணியிடத்தில் உன்னதமான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

பரிசுப் பொருள்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் துணை திருப்தி காண்பார்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உங்களிடம் தேவையான பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.

## ரிஷபம்

உங்கள் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுக்க வேண்டியது அவசியம். இன்று அதை பொறுப்புகள் காணப்படும். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி தாமதமாகும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் அடையலாம்.

இருக்கும் வேலையை விட்டு வேறு வேலைக்கு போகும் எண்ணம் உண்டாகும். உங்களுக்கு திருப்தி அளிக்கும் ஒரு மாற்றத்தை இன்று நீங்கள் விரும்புவீர்கள்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுக்காமல் சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க இந்த அனோகுமுறை தேவை.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். அதனைச் சுமையாக உணர்வீர்கள். பணத்தை திட்டமிட்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கி செலவுகளை தவிர்த்திடுங்கள்.

பல்வலிமற்றும்கண்சம்பந்தமானபாதிப்புகள்ஏற்படலாம். இது உங்கள் கவலைக்கு காரணமாக அமையும்.

## மிதுனம்

இன்று காணப்படும் சிறிய பிரச்சினை ஒன்றை கையாள்வதில் கருத்தாய் இருப்பீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்க முயலுங்கள்.

உங்கள் பணியில் இன்று வளர்ச்சி கிடைப்பதற்கு உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் பேசும் போது மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தகவல் பரிமாற்றத்தின் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் நிதியைப் பொறுத்தவரை முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். புதிய முதலீடுகள் செய்வது அல்லது அதற்கான முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல் வலி அல்லது ஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.

## கடகம்

இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாக திட்டமிட்டு செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும். இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.

## சிம்மம்

இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணயில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்திற்கு செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும். பணம் இன்று குறைவாக இருபதால் நீங்கள் முறையாக திட்டமிட இயலாது.

## கன்னி

இன்று சில பிரச்சினைகளை சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

## துலாம்

இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## விருச்சிகம்

அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.

# இன்றைய ராசி பலன்கள் - 09.12.2023




உங்கள் செயல்களை ஊக்கத்துடன் குறித்த நேரத்தில் செய்வதன் மூலம் சிறந்த பலன்கள் கிடைக்கும். சின்னச் சின்ன விஷயங்களுக்காக மன அமைதியை கெடுத்துக் கொள்ளாமல் விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடமும் கீழ் பணிபுரிபவர்களிடமும் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். இலக்கில் கவனம் செலுத்தினால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியும்.

உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகயும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று உங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசித்து சில நல்ல திட்டங்களை உருவாக்குவீர்கள். உங்கள் தொழில் வட்டாரத்தில் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சிவசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

பணியில் வெற்றி பெறுவதற்கு சிறப்பாக திட்டமிடும் திறமை உங்களிடம் காணப்படும். அதனால் பணிகளை குறித்த நேரத்தில் தரமாக முடித்து தர முடியும்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்ளவும். சரியான புரிந்துணர்வு இருந்தால் உறவு நல்லுறவாக இருக்கும்.

உங்கள் வருமானம் அதிகரிப்பதற்கான வழி காண வேண்டும். ஆடம்பரப் பொருட்களுக்காக பணத்தை அதிகமாக செலவு செய்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்க ளிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.

இன்று கால் வலி ஏற்படலாம்.









# கோடிக்கணக்கு ரூபா பெறுமதியான 2,600 கிலோ பீடி இலைகள் சிக்கின!

(ரஸீன் ரஸ்மின்)

சட்டவிரோதமாக லொறியொன்றில் கொண்டுசெல்லப்பட்ட 2 ஆயிரத்து 600 கிலோ கிராம் பீடி இலைகள் குருநாகல் - மாஸ்பொத பகுதியில் வைத்து இராணுவம் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேகத்தின் பெயரில் குறித்த லொறியின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலின்படி இராணுவத்தினரும், விசேட அதிரடிப் படையினரும் கூட்டாக இணைந்து நேற்று அதிகாலை அந்தப் பகுதியில் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின் போதே இந்தப் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத பீடி இலைகள் இந்தியாவிலிருந்து இலங்கையில் பல இடங்களுக்கும் விநியோகிக்கும் நோக்கில் கடல் மார்க்கமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

புத்தளம் - சிலாபம் பகுதியில் இருந்து மாவனல்லை நோக்கி லொறியொன்றில் பீடி இலைகள் எடுத்துச் செல்லப்பட்டபோது, இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மஸ்பொத்த பிரதேசத்தில் வைத்து குறித்த லொறியைப் பரிசோதனை செய்தனர்.

இதன்போது, அந்த லொறியில் மிகவும் சூட்சுமமான முறையில் உரைப் பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் இருந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் ஒரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சம் (1,350,000) பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட லொறியின் சாரதி,



கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் லொறியுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வடமேல் மாகாண கலால் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# வாள், கத்தி தயாரிக்கும் இடங்களைத் தேடி யாழ்ப்பாணத்தில் விசேட சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணத்தில் வாள், நீளமான கத்தி தயாரிக்கும் இடங்களைத் தேடி விசேட சுற்றிவளைப்புகளைத் தீவிரப் படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்ற வாள் வெட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று யாழ். பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக யாழ். குடா நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதால், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளதாக யாழ். பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, யாழ். மாவட்டத்தில் கூலிக்காக குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கூலிக்காகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டும் செயற்பாட்டைத் தாம் தொடர்ச்சியாக முன்னெடுப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்.



# அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்!



## அதைத் தொடர்ந்து ஏனைய தேர்தல்கள் நடைபெறும் என்று ரணில் மீண்டும் உறுதி

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும், அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் என்பன நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான மகா சங்கத்தின் தேரர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தநிலையில், தேர்தலின் பின்னர் அரசமைப்பு திருத்தங்கள் அல்லது புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பவற்றை மேற்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான மகா சங்கத்தின் தேரர்கள் ஆகியோர் இணைந்து இமயமலை பிரகடனத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இதன்போது கையளித்தனர்.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மறுசீரமைப்பு, சமூக நலன் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்ட 6 முக்கிய விடயங்களை 'இமயமலைப் பிரகடனம்' உள்ளடக்கியுள்ளது.









# உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவ நடவடிக்கை

நிலைமாறுகால நீதி மற்றும் போருக்குப் பின்னரான நல்லிணக் கத்தை நோக்கிய ஒரு முக்கியமான படியாக, உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவ அரசு தீர்மா னித்துள்ளது.

முன்மொழியப்பட்ட ஆணைக்குழு நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்படுவதோடு, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்தாலோசித்து குறித்த சட்டமூலம் தற்போது தயாரிக் கப்பட்டு வருகின்றது.

சட்டமூலம் தொடர்பாக பொதுமக் களிடம் இருந்து கருத்துகளைப் பெறும் வேலைத்திட்டம் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படவுள்ளது என்று ஜனாதி பதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் இலங்கைப் பிரஜைக ளின் முறைப்பாடுகள் தொடர்பில் உண்மையை உறுதி செய்யும் வகை யில் நல்லிணக்கம், இழப்பீடுகள் மற்றும் நிலையான அமைதிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதே முன்மொழி யப்பட்ட செயல்முறையின் முக்கிய நோக்கமாகும்.

கடந்த காலங்களில் மக்கள் எதிர் கொண்ட மோதல் சூழ்நிலைகளில் இருந்து மீள்வதற்கு அவசியமான ஒரு முக்கிய அங்கமான உண்மையைத் தேடுவதற்கு ஒவ்வொரு இலங்கை யருக்கும் உள்ள மறுக்க முடியாத உரிமையை அங்கீகரிக்கும் வகை யில் இந்த உத்தேச ஆணைக்குழு செயற்படும்.

மேலும், இலங்கை மக்களிடையே தேசிய ஒருமைப்பாடு, சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவம், சகிப்புத்தன்மை, பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் நல்லிணக் கத்தை நிலைநாட்டவும் வலுப்படுத்த வும் இந்த ஆணைக்குழு செயற்படும்.

இலங்கையின் பல்லின மற்றும் பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் நிலவும் பொருத்தப்பாடின்மை மற்றும் எதிர்காலத்தில் மீண்டும் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு உறுதியுடன் செயற்படுதல் முன்மொழியப்பட்ட ஆணைக்குழுவின் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உட்பட இலங்கையின் யுத்தத்துக்குப் பிந்தைய நல்லிணக்க முயற்சிகளில் கடந்த பல ஆணைக்குழுக்கள் வழங்கிய பரிந்துரை களை மீளாய்வு செய்யவும், பரிசீலிக்க வும் மற்றும் நடைமுறைப்படுத்தவும் இந்த ஆணைக்குழு செயற்படும்.

அரசால் 2006 ஆம் ஆண்டு அமைக் கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறை கள் தொடர்பான ஆலோசனை செயல ணியின் கண்டுபிடிப்புகளையும் இந்த ஆணைக்குழு கவனத்தில் கொள்ள வுள்ளது.

உத்தேச சுயாதீன ஆணைக்குழு எந்தவித அரசியல் தலையீடு இன்றி யும் பக்கச்சார்பற்றதாகவும், செயற் படுவதை உறுதிப்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது.

உத்தேச புதிய சட்டம் அமுலுக்கு வரும் வரை, உண்மை மற்றும் நல்லி ணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் என்ற இடைக்கால நிறுவ னத்தை ஸ்தாபிக்கவும் அரசு நடவ டிக்கை எடுத்துள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகம், இந்த உத்தேச ஆணைக் குழுவுக்குத் தேவையான சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பு, செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டு தல்களை உருவாக்க ஏற்கனவே செயல்பட்டு வருகின்றது.

சுதந்திரமான உள்நாட்டு ஆணைக் குழுவை நிறுவுவதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல், நீதிமன்ற அதிகார பிரதேசங்களின் வெற்றிகர மான வழிமுறைகளிலிருந்து உத் வேகங்கள் மற்றும் வழிகாட்டுதல் களை ஆய்வு செய்வதன் மூலம் உண்மை, நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் உள்நாட்டுத் தீர்வுக்கான அடிப்ப டையை உருவாக்குவதற்கும், உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக் கான இடைக்கால செயலகத்தின் நோக்கமாகும்.

இந்தப் பொறிமுறையை வடிவ மைக்கவும் மற்றும் இறுதியில் நிலை யான அமைதி மற்றும் தேசிய ஒற்று மைக்கு வழி வகுக்கக் கூடிய, குறித்த தரப்பினர்களின் பங்கேற்புடன் மற்றும் ஆலோசனையுடன் ஆணைக்குழு கட்டமைக்கப்படுவதை உறுதி செய்வ தற்காக, உண்மை மற்றும் நல்லிணக் கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்தால் தற்போது பொதுமக் களுடனும் குறித்த தரப்பினர்களின் பங்குபற்றலுடன் கூடிய நிகழ்ச்சிகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றது. – என்றுள்ளது.

# சீனாவுக்குக் கறுவாப்பட்டை ஏற்றுமதி



இலங்கையின் கறுவாப்பட்டைக்குச் சீன சந்தையில் அதிக கேள்வி நிலவு கின்றது.

இதனால் வருடாந்தம் இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான கறுவாவை சீனாவுக்கு அடுத்த வருட தொடக்கத்தில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள் ளது.

இந்த ஏற்றுமதியானது நாட்டின் கறுவா சந்தைக்குப் பெரும் அனு கூலமாகும் என்று கறுவா அபிவி ருத்தி திணைக்களத்தின் பணிப்பா ளர் நாயகம் ஜனக்க லிந்தர தெரி வித்துள்ளார்.

பல வருடங்களாக முன்வைக்கப் பட்ட கோரிக்கைகளின் பலனாக அண் மையில் ஜனாதிபதியின் சீன விஜயத் தின்போது இதற்கான அனுமதி கிடைத் துள்ளது என்றும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.